முழுமையாக மழைநீர் அகற்றப்படும் வரையில்

# தொய்வின்றிக் களப்பணியைத் தொடர்வோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

சென்னை, அக். 18 -

**“முழுமையாக மழை நீர் அகற்றப்படும் வரையில் தொய்வின்றிக் களப் பணியைத் தொடர்வோம்” என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உறுதிபடக் கூறியுள்ளார்.**

கனமழையையொட்டி மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

கனமழை குறித்த ‘அலெர்ட்’ பெறப்பட்டவுடன் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு, பொதுமக்களின் ஒத்துழைப்போடு எதிர்கொண்டோம்.

பெரும்பாலான இடங்களின் மழைநீர் தேங்காமல் சரிசெய்யப்பட்டுள்ளது.

முழுமையாக மழைநீர் அகற்றப்படும் வரையில் தொய்வின்றிக் களப்பணியைத் தொடர்ந்திடுவோம்!

இவ்வாறு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

பஞ்சாப் மாநில முதலமைச்சர்

# பகவந்த்மான் பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, அக். 18-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களின் பிறந்த நாளையொட்டி சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களுக்கு எனது பிறந்தநாள் நல்வாழ்த்துகள்!**

**தாங்கள் நல்ல உடல்நலத்துடனும், வலிவுடனும், எடுத்த செயலில் எல்லாம் வெற்றியுடனும் திகழ விழைகிறேன்.**



இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# தி.மு.க. இளைஞர் அணி

## என் உயிரினும் மேலான..!

### கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, தி.மு.க. இளைஞர் அணி நடத்தும் **‘என் உயிரினும் மேலான..!’** பேச்சுப் போட்டி மாவட்ட மற்றும் மண்டல அளவில் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்துள்ளது.

மாநில அளவிலான இறுதிப்போட்டி 19.10.2024 அன்றும், பரிசளிப்பு விழா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், 20.10.2024 அன்றும் சென்னையில் நடைபெறும் என்று அறிவித்திருந்தோம்.

தமிழ்நாடு முழுவதும் கனமழை பெய்துள்ள சூழலில், போட்டியாளர்களின் நலன் கருதி, இரு நிகழ்ச்சிகளையும் ஒத்தி வைத்துள்ளோம். மாநில அளவிலான இறுதிப் போட்டி மற்றும் பரிசளிப்பு விழா தேதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

**அன்பகம்,**
சென்னை – 18.
நாள் : 17–10–2024.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

திருவள்ளூர் - காஞ்சிபுரம் - செங்கல்பட்டு மாவட்டங்களில்

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!

## நிவாரண முகாம்களையும் பார்வையிட்டார்!

சென்னை,அக்.18-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் மழை வெள்ள சீரமைப்பு பணிகள் மற்றும் நிவாரண முகாம்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார்

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.10.2024) திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் மழை வெள்ள சீரமைப்பு பணிகள் மற்றும் நிவாரண முகாம்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவள்ளூர் மாவட்டம், திருநின்றவூர், இராமதாசுபுரம் ஈஷா ஏரியை நேரில் பார்வையிட்டு, தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார். மழைநீர் வரத்து பகுதிகளில் தண்ணீர் தடையின்றி வரும் வகையிலும், வெளிப்போக்கி பகுதி மற்றும் கால்வாய்களில் நீர் செல்லும் வகையிலும் தொடர்ந்து கண்காணித்து சீரமைப்பு பணிகளை உடனுக்குடன் மேற்கொள்ளுமாறு நீர்வளத்துறை அலுவலர்களிடம் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, திருநின்றவூர், ஏஞ்சல் பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மழைக்கால நிவாரண முகாமில் சுகாதார வசதிகள், குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து நேரில் பார்வையிட்டு உறுதி செய்தார். நிவாரண முகாமில் தங்கியுள்ள பொதுமக்களுக்கு போர்வை, ரொட்டி உள்ளிட்ட பொருட்களை வழங்கினார். நிவாரண முகாமில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவ முகாமில் மருந்து பொருட்களையும் பார்வையிட்டார். இந்த ஆய்வின்போது பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்து உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அலுவலர்களிடம் தெரிவித்தார்.

தொடர்ந்து காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியம், செம்பரம்பாக்கம் ஏரியினை பார்வையிட்டு, நீர்வரத்து மற்றும் நீர்வெளியேற்றம் குறித்து பொதுப்பணித்துறை மற்றும் வருவாய்த்துறை அலுவலர்களுடன் ஆய்வு செய்தார். நீர் இருப்பை தொடர்ந்து கண்காணித்து மழைப்பொழிவுக்கு ஏற்றபடி உடனுக்குடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அலுவலர்களிடம் தெரிவித்தார்.

பின்னர் செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம், அகரம் தென், கிருஷ்ணாநகர் பகுதியில், மழைநீர் வடிகால் தூர்வாரப்பட்டு வரும் பணியினை பார்வையிட்டார். சென்னை, கோவிலம்பாக்கம் சுண்ணாம்பு கால்வாயில் நேற்றைய தினம் பார்வையிட்டு தெரிவித்த கருத்துகளின் படி, ஆகாய தாமரைகள் அகற்றப்பட்டு நீர் சீராக செல்வதை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டு உறுதி செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, துணை முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், திருவள்ளூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் க.சு.கந்தசாமி, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் டாக்டர் த. பிரபு சங்கர், (திருவள்ளூர்), திருமதி கலைச்செல்வி மோகன், (காஞ்சிபுரம்), ச.அருண் ராஜ், (செங்கல்பட்டு) கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி அனாமிகா ரமேஷ், மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மின்னல் வேக நடவடிக்கை!

# பணியாளர்களைப் பாராட்டிய துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்!

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கனமழை காரணத்தால் பள்ளிக்கரணை - கோவிலம்பாக்கம் இடையேயுள்ள நாராயணபுரம் ஏரி மற்றும் அதற்கான கால்வாய்களை நேற்று முன்தினம் நள்ளிரவு 12.30 மணியளவில் ஆய்வு செய்தார். கோவிலம்பாக்கம் அம்பேத்கர் சாலை பாலத்தின் அருகே ஆய்வில் ஈடுபட்டிருந்த போது, அங்குள்ள கால்வாயின் மேற்கு பக்கத்தில் கரைகள் உயர்த்தப்பட்டு, ஆகாயத்தாமரை முழுமையாக அகற்றப்பட்டு உள்ளதை குறிப்பிட்ட அப்பகுதி மக்கள், மழைநீர் தடையின்றி வெளியேற ஏதுவாக கால்வாயின் கிழக்கு பக்கத்திலும் ஆகாயத் தாமரைகளை அகற்றித்தர வேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர்.

அதனடிப்படையில், உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கானப் பணிகளை நேற்று முன்தினம் மாலை ஆய்வு செய்த போது, ஆகாயத்தாமரையை அகற்றும் பணி துரிதமாக நடைபெற்று வந்தது. இந்த சூழலில், மூன்றாவது நாளாக நாராயணபுரம் ஏரிக்கான நீர்வழித்தடமாக உள்ள அக்கால்வாயில் ஆய்வு செய்தார். இன்றைய தினம் ஆகாயத்தாமரை முழுமையாக அகற்றப்பட்டு, கால்வாயின் வழியாக நாராயணபுரம் ஏரி நோக்கி மழைநீர் வேகமாக வெளியேறி வருகிறது. இதற்காக இரவு-பகலாக உழைத்தப் பணியாளர்களை நேரில் பாராட்டினார்.










# பெரம்பலூரில் - மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்!

## இளைஞர்கள் பயன்படுத்திக் கொள்ள அருண் நேரு எம்.பி. அழைப்பு!

பெரம்பலூர், அக் 18 –

பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட குளித்தலை, லால்குடி, முசிறி துறையூர், மண்ணச்சநல்லூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள 18 வயது முதல் 35 வயது உட்பட்டோருக்கான தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் நாளை (19.10.2024) காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ளது. இந்த வேலை வாய்ப்பு முகாமில் 120க்கும் மேற்பட்ட முன்னணி தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டு 20,000க்கும் மேற்பட்ட காலி பணியிடங்களுக்கான பணி வாய்ப்புகளை வழங்க உள்ளனர்.

5ம் வகுப்பு முதல் பட்டப் படிப்பு வரை ஐ.டி.ஐ., டிப்ளமோ, அக்ரி, நர்சிங், பார்மசி, பி.இ.,

பி.டெக், ஹோட்டல் மேனேஜ்மென்ட் மற்றும் ஆசிரியர் கல்வி தகுதி உடையவர்களை தேர்வு செய்ய உள்ளனர்.

மேலும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை திட்டத் தின் கீழ் உதவித்தொகை பதிவு செய்யப்படும், சுய தொழில் தொடங்க ஆர்வம் உள்ளவர்களுக்கு மாவட்ட தொழில் மையம் தாட்கோ போன்ற நிறுவனங்களின் மானியத்துடன் கூடிய கடன் திட்டங்கள் சுய தொழில் உருவாக்கும் திட்டத்திற்கான ஆலோசனைகள் வழங்கப்படும்.

கல்வி தகுதிக்கேற்ப குறைந்தபட்ச மாத ஊதியம் ரூபாய் 10,000 முதல் 25,000 வரை வழங்கும் வகையிலான பணி வாய்ப்புகள் வழங்கப்பட உள்ளன.

எனவே பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த இளைஞர்கள் இந்த வேலை வாய்ப்பு முகாமை பயன்படுத்தி கொள்ளுமாறு பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் அருண் நேரு அழைப்பு விடுத்துள்ளார்.

